# JSR IAS ACADEMY

# பொது அறிவியல்

# வேதியியல்

# பெட்ரோலிய பொருட்கள்

# பெட்ரோலியம்

### பெட்ரோலியம்

- பெட்ரோலியம் என்ற சொல் '**பாறை" எனப் பொருள்படும் 'பெட்ரா" மற்றும் எண்ணெய் எனப் பொருள்படும் 'ஓலியம்"** என்ற இலத்தின் மொழிச் சொற்களிலிருந்து பெறப்பட்டது.
- பெட்ரோலியம் பூமியில் காணப்படும் பல்வேறு **திட, திரவ வாயு நிலைகளில் காணப்படும் ஹைட்ரோகார்பன்களின் கலவையாகும்.**
- பொதுவாக பெட்ரோலியம் என்பது திரவ நிலையில் காணப்படும் கச்சா எண்ணெயைக் குறிக்கும்.
- ஆனால் **பெட்ரோலியம் என்பது இயற்கை வாயு, திட நிலை பிட்டுமென் ஆகியவற்றையும் சேர்த்தே குறிக்கும்** ஒரு சொல்லாகும்.
- இயற்கை வாயு மற்றும் கச்சா எண்ணெய் முதன்மை படிம எரிபொருட்கள் எனப்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

**பழங்கால நாகரிகங்கள் கச்சா ஒட்டும் பொருட்களாகப் பயன்படுத்தியுள்ளன. பல்வேறு பரப்புகளில் நீர்புகாவண்ணம் தடுப்பதற்கு ஒட்டும் பொருளாக பயன்படுத்தப்பட்டது.**

### பெட்ரோலியத்தின் பரவல் (அளவு)

- உலகில் முதன்மையான பெட்ரோலியம் உற்பத்தி நாடுகள் **அமெரிக்க ஐக்கிய நாடுகள், குவைத், ஈராக், ஈரான், ரஷ்யா மற்றும் மெக்ஸிகோ.**
- இந்தியாவில் அஸ்ஸாம், குஜராத், மகராஷ்டிரா (மும்பை), ஆந்திர பிரதேசம் (கோதாவரி, கிருஷ்ணா நதிப்படுகைகள்), தமிழ்நாடு (காவிரிப்படுகை) ஆகிய இடங்களில் காணப்படுகிறது.

### கச்சா எண்ணெயை சுத்திகரித்தல்

எண்ணெய்க் கிணறுகளிலிருந்து கிடைக்கும் அடர்ந்தகருமை நிற வழுவழுப்பான தூய்மையற்ற பெட்ரோலியமானது **நீர், திண்மத் துகள்கள், மீத்தேன், ஈத்தேன்** போன்ற வாயுக்கள் ஆகியவற்றைமாசுக்களாகக் கொண்டுள்ளது.

### படிநிலைகள்

### நீரைப் பிரித்தெடுத்தல்

- எண்ணெய்க் கிணறுகளிலிருந்து பெறப்படும் கச்சா எண்ணெய் உப்பு நீரையும் சேர்ந்தே பெற்றிருக்கும்.
- எனவே முதல் படியாக நீரானது கச்சா எண்ணெயிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.

### சல்பர் சேர்மங்களைப் பிரித்தெடுத்தல்

கச்சா எண்ணெயில் உள்ள தீங்கு விளைவிக்கும் சல்பர் சேர்மங்கள் மாசுக்களாக உள்ளன. இந்நிலையில் இம்மாசுக்கள் வெளியேற்றப்படுகின்றன.

### பின்னக்காய்ச்சி வடித்தல்

- பெட்ரோலியம் என்பது **பெட்ரோலிய வாயு, பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் உயவு எண்ணெய், பாரபின் மெழுகு** ஆகியவற்றை கொண்ட ஒரு கலவையாகும்.
- இந்தப் பகுதிப்பொருட்களை பின்னக் காய்ச்சி வடித்தல் கலன்களில் பின்னகாய்ச்சி வடித்தல் மூலம் பிரிக்கப்படுகின்றன.
- வெவ்வேறு கொதிநிலைகளை உடைய திரவங்கள் அடங்கிய கலவையை வெப்பப்படுத்தி தனித்தனியாகப் பிரித்து பின்பு குளிர்வித்தலை பின்னக்காய்ச்சி வடித்தல் என்கிறோம்.
- தூய்மையற்ற பெட்ரோலியம் முதலில் $400^0C$ ஒரு உலையில் வெப்பப்படுத்தப்படுகிறது.
- பயன்தரும் பல பொருட்கள் பெட்ரோலியத்திலிருந்தும் இயற்கை வாயுவிலிருந்தும் கிடைக்கின்றன. இவை '**பெட்ரோகெமிக்கல்ஸ்"** எனப்படுகின்றன.
- இப்பொருட்கள் **டிடர்ஜெண்டகள், செயற்கை இழைகள் மற்றும் பாலித்தீன்** போன்ற மனிதனால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக்குகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.
- இயற்கை வாயுவிலிருந்து கிடைக்கும் ஹைட்ரஜன் உரங்கள் தயாரிக்க பயன்படும்.
- இது வணிகரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தாக கருதி பெட்ரோலியத்தை நாம் 'கருப்புத்தங்கம்" என்கிறோம்.




படம் 6.17 பெட்ரோலியத்தை பிரித்தெடுத்தல்

> உங்களுக்குத் தெரியுமா?
>
> உலகின் முதல் பெட்ரோலிய எண்ணெய்க் கினறு 1839 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியாவில் தோண்டப்பட்டது. இரண்டாவது எண்ணெய்க் கிணறு 1867 ஆம் ஆண்டு இந்தியாவில் அசாமில் மாக்கும் என்ற இடத்தில் தோண்டப்பட்டது.

### பெட்ரோலியத்தின் பயன்கள்

- ❖ திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு (LPG) வீடுகளிலும் தொழிற்சாலைகளிலும் எரிபொருளாக பயன்படுகிறது.
- ❖ பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு எரிபொருளாகப் பயன்படுகிறது. இவை மின்சார ஜெனரேட்டர்களை இயக்கவும் பயன்படுகின்றன.
- ❖ உலர் சலவை செய்வதற்கு ஒரு கரைப்பானாக பெட்ரோல் பயன்படுகிறது.
- ❖ ஸ்டவ் அடுப்புகளிலும் ஜெட்விமானங்களிலும் மண்ணெண்ணெய் எரிபொருளாகப் பெட்ரோலியத்திலிருந்து பயன்படுகிறது.
- ❖ பெட்ரோலியத்திலிருந்து பெறப்படும் உயவு எண்ணெய் எந்திர பாகங்களின் தேய்மானத்தைக் குறைக்கவும் எந்திரங்கள் துருப்பிடிக்காமலும் பாதுகாக்க உதவுகிறது.
- ❖ பாரபின் மெழுகு, மெழுகு வர்த்திகள், களிம்பு மருந்துகள், எழுதப் பயன்படும் மை, வண்ணம் தீட்டும் பென்சீல்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.
- ❖ பிட்டுமன் அல்லது அஸ்பால்ட் சாலைகள் அமைக்கப் பயன்படுகிறது.

### எரிபொருட்களின் வகைகள்

### திட எரிபொருட்கள்

- ❖ **மரம் மற்றும் நிலக்கரி** போன்றவை திட நிலையில் உள்ளதால் திட எரிபொருட்கள் எனப்படுகின்றன.
- ❖ இந்தவகை எரிபொருட்கள் முதன் முதலில் மனிதனால் பயன்படுத்தப்பட்டது.

### திரவ எரிபொருட்கள்

- **பெட்ரோலிய எண்ணெய், கரித்தார் மற்றும் ஆல்கஹால்** ஆகியவை சில திரவ எரிபொருட்களாகும்.
- இந்த எரிபொருள்கள் எரியும் பொழுது அதிக ஆற்றலைத் தருகின்றன. மேலும் சாம்பல் தராமல் எரிகின்றன.

### வாயு எரிபொருட்கள்

**நிலக்கரி வாயு, எண்ணெய் வாயு, உற்பத்தி வாயு மற்றும ஹைட்ரஜன் வாயு** ஆகியவை வாயு எரிபொருள்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் ஆகும்.

### எரிபொருட்கள் பண்புகள்

ஒரு நல்லியல்பு எரிபொருள் பின்வரும் பண்புகளைப் பெற்றுள்ளது.

- எளிதில் கிடைக்கக்கூடியது.
- எளிதில் கொண்டு செல்லப்படக்கூடியது.
- குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது.
- உயர்ந்த கலோரி மதிப்பைக் கொண்டது.
- அதிகமான வெப்பத்தைவெளிவிடக்கூடியது
- எரிந்த பிற்கு விரும்பத்தகாத கழிவுகளை தருவதில்லை.

### எரிபொருள் திறன்

ஒரு எரிபொருள் எரியும் பொழுது ஆக்ஸிஜனுடன் இணைந்து எரிந்து அதிகளவு வெப்பத்தை வெளிவிடுகிறது

### குறிப்பிடத்தக்க ஆற்றல்

ஓரலகு நிறையுடைய எரிபொருள் எரியும் பொழுது வெளிவிடப்படும் வெப்ப ஆற்றலே குறிப்பிடத்தக்க ஆற்றல் எனப்படும். இது ஓரலகு நிறைக்கான ஆற்றல் என வரையறுக்கப்படுகிறது

இது எரிபொருட்களில் தேக்கி வைக்கப்பட்டுள்ள ஆற்றலை அளவிட பயன்படுகிறது இதன் அலகு **Jkg -1**

### கலோரி மதிப்பு

சாதாரண சூழ்நிலைகளில் நிலையான அழுத்தத்தில் ஒரு எரிபொருள் முழுமையாக எரிந்து வெளிவிடும் வெப்பாற்றலின் அளவாகும். இது **KJ/Kg** என்ற அலகில் அளக்கப்படுகிறது

| எரிபொருள் | கலோரி மதிப்பு |
|---|---|
| மாட்டுச்சாணக்கட்டி | 6000 – 8000 |
| மரம் | 17000 – 22000 |
| நிலக்கரி | 25000 – 33000 |
| பெட்ரோல் | 45000 |
| மண்ணெண்ணெய் | 45000 |
| டீசல் | 45000 |
| மீத்தேன் | 50000 |
| CNG | 50000 |
| LPG | 55000 |
| உயிரி வாயு | 35000 – 40000 |
| ஹைட்ரஜன் | 150000 |

### ஆக்டேன் எண்:

இது பெட்ரோலில் உள்ள ஆக்டேன் என்ற ஹைட்ரோகார்பனின் அளவைக் குறிக்கும் ஒரு எண்ணாகும்.

உயர்ந்த ஆக்டேன் எண்ணை பெற்றுள்ள எரிபொருள் ஒரு நல்லியல்பு எரிபொருளாகும்.

### சீட்டேன் எண்

இது டீசல் எஞ்சினில் உள்ள எரிபொருளின் பற்றவைப்பு கால அளவை அளப்பதாகும்.

சீட்டேன் எண் அதிகம் எனில் அது குறைவான பற்றவைப்பு நேரத்தைக் குறிக்கும் உயர்ந்த சீட்டேன் எண்கொண்ட எரிபொருள் ஒரு நல்லியல்பு எரிபொருள் எனப்படும்.

| ஆக்டேன் எண் | சீட்டேன் எண் |
|---|---|
| ஆக்டேன் எண் மதிப்பீடு பெட்ரோலுக்கு பயன்படுத்தப்படுகிறது | சீட்டேன் எண் மதிப்பீடு டீசலுக்குப் பயன்படுகிறது. |
| இது பெட்ரோலிலுள்ள ஆக்டேனின் அளவைக் குறிக்கிறது. | இது டீசல் எஞ்சினிலுள்ள பற்றவைப்பு எரிபொருளின் நேரத்தைக் குறிக்கிறது. |
| பென்சீன், அல்லது டொலு வினை சேர்ப்பதன் மூலம் பெட்ரோலின் ஆக்டேன் எண்ணை அதிகரிக்க முடியும். | ஆசிட்டோனைச் சேர்பதன் மூலம் டீசலின் சீட்டேன் எண்ணை அதிகரிக்க முடியும். |
| உயர்ந்த ஆக்டேன் எண் பெற்றுள்ள எரிபொருளின் சீட்டேன் எண் குறைவாக இருக்கும் | அதிக சீட்டேன் எண் பெற்றுள்ள எரிபொருளின் ஆக்டேன் எண் குறைவாக இருக்கும். |

இன்னும் **148 ஆண்டுகளுக்கு மட்டுமே நிலக்கரியும், 40 வருடங்களுக்கு மட்டுமே பெட்ரோலியமும், 61 வருடங்களுக்கு மட்டுமே இயற்கை வாயுவும்** இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

**உயிரி டீசல்**

இது தாவர எண்ணெய்களான **சோயபீன் எண்ணெய், ஆமணக்கு எண்ணெய், சோள எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், பருத்தி விதை எண்ணெய், அரிசி தவிடு எண்ணெய் மற்றும் இரப்பர் மர விதை எண்ணெய்** ஆகியவற்றில் இருந்து கிடைக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**எதிர்காலத்தில் ஹைட்ரஜன் வாயு ஒரு மிகச்சிறந்த மாற்று எரிபொருளாகும். இந்த எரிபொருள் தூய்மையானது ஏனெனில் இது எரியும் பொழுது நீர்மட்டுமே வெளிவரும், இதுமட்டுமல்லாமல் அதிகமான ஆற்றலையும் காற்றை மாசுபடுத்தாத தன்மையையும் பெற்றுள்ளது.**

**காற்றாலைகள்**

தமிழகத்தில் **கயத்தாறு, ஆரல்வாய்மொழி, பல்லடம் மற்றும் குடிமங்களம்** ஆகிய ஊர்களில் அமைந்துள்ளன.

**சாண எரிவாயு**

- காற்றில்லாச் சூழலில் மாட்டுச் சாணத்தை நொதிக்க வைத்து சாண எரிவாயு பெறபப்படுகிறது.
- இதில் பெரும்பான்மையாக **மீத்தேனும் சிறிதளவு ஈத்தேனும்** உள்ளது.